**பள்ளேபொல பிரதேச சபையி - 2024**
---------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பள்ளேபொல பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பள்ளேபொல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்பு

இந் நிதிக் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 .நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டில் கடனாக்கப்பட்டிருந்த ரூபா. 598,850 பெறுமதியான கட்டிடங்களின் நிர்மாணம் மூலதனமாக்கப்படவில்லை. | 2025 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது இது சரி செய்யப்படும் என்பதாக | கணக்குகள் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா. 125,823 பெறுமதியான 07 நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்படவில்லை. | 2025 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளில் சீராக்கங்கள் உறுதிப் படுத்தப்படும் என்பதாக. | - மேற்படி - |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு** | **இணக்கமின்மை** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| **(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம்**<br>122 ஆம் பிரிவு | விளைச்சல் வரி அறவீடு பேக்கோ இயந்திரங்களை வாடகைக்கு எடுப்பது மற்றும் கழிவுப்பொருள் கட்டணம் அறவிடுவது தொடர்பாக உப விதிகள் இயற்றப்படவில்லை அல்லது பின்பற்றப்பட வில்லை. | அதற்கேற்ப செயல்பட உப விதிகள் இயற்றப்பட்டு உடனடியாக செயற்படுத்தப்படுவ தாக. | வருமானம் ஈட்டும் துறைகள் தொடர்பாக உப விதிகள் இயற்றப்பட வேண்டும். |
| **(ஆ) விதிகள் மற்றும் நியதிச் சட்டம்**<br>1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 59 | கைத்தொழில் மற்றும் வர்த்தக வியாபாரங்கள் தொடர்பாக ஆண்டின் ஆரம்பத்தின் போது கணிப்பீடொன்று மேற்கொண்டு பட்டியலொன்று மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் வர்த்தமானி மூலம் வெளிப்படுத்துவதற் கு நடவடிக்கை எடுப்பதாக. | வருடாந்த கணிப்பீடொன்று மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(இ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | | |
| நி.பி 571(3) | 2018–2022 காலப் பகுதிக்கான ரூபா 76,001 ஆன காலாவதியான 31 வைப்புக்கள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | இற்றைப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாக. | காலாவதியான வைப்புக்கள் தீர்வு செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 16,734,784 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 16,916,319 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2024 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2023 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரியும் வரியும் | 3,159,650 | 4,058,751 | 3,516,294 | 963,745 | 2,559,600 | 1,233,548 | 1,246,214 | 421,288 |
| (ii) வாடகை | 6,273,300 | 6,823,776 | 6,766,626 | 596,270 | 5,949,000 | 4,469,858 | 4,479,448 | 539,120 |
| (iii) அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,209,600 | 838,325 | 838,325 | 27,300 | 1,560,000 | 1,036,013 | 1,008,713 | 27,300 |
| (iv) ஏனைய வருமானம் (நீர்) | 28,411,000 | 29,997,924 | 36,658,842 | 24,188,231 | 46,914,500 | 36,302,592 | 8,258,949 | 30,849,149 |
| | 39,053,550 | 41,718,776 | 47,780,087 | 25,775,546 | 56,983,100 | 43,042,011 | 14,993,324 | 31,836,857 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ஒரு அலகிலிருந்து நிலுவை வீதவரி மீதி ரூபா 930,064 ஆன நிலுவை வீதவரி மீதியொன்று காணப்பட்டது. அதில் 1,000 ஐ மிகைத்த 250 வீதவரி அலகுகளில் இருந்து ரூபா 849,314 தொகை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 ஆம் பிரிவின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானங்கள் அறவிடப்பட வேண்டும். |
| **(ஆ) முத்திரைக் கட்டணங்கள்** | | |
| மத்திய மாகாண பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 20,627,902 ஆக இருந்தது. | இத் தொகை இதுவரை அறவிடப்படவில்லை என்பதாக. | நிலுவை வருமானங்கள் அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய 04 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 3,435,451 ஆக இருந்தது. அதில் 01 வருடத்திற்கும் 05 வருடங்களுக்கு குறைந்த மீதிகள் ரூபா 958,261 மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கணக்கு மீதிகள் ரூபா 13,279 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவையாக உள்ள ஏக்கர், வரி வருமானம், நானாவித நிர்மாண கடன்பட்டோர் மற்றும் நிலுவை நீர் கட்டணங்கள் என்பவற்றை அறவிடுவதற்காக தேவையான நடவடிக்கை களை எடுப்பதாக. | பெறவேண்டிய மீதிகள் அறவிடப்பட் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் பயன்படுத்தப்படுகின்ற ரூபா 25,000 ஆன 12 மயானங்களின் உரித்து கையேற்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த சொத்தக்களை கையேற்பதற்கு தேவையான வேண்டுகோள்ள விடுக்கப்பட்டுள்ளதாக. | சபைக்கு சொந்தமான காணிகளின் உரித்தினைக் கையேற்கப்பட வேண்டும். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியுடன் ஒப்பிடும் போது 05 பதவிகளில் 07 வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்களுக்காக உரிய உத்தியோகத்தர் களை நியமனம் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |